Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **STC 383/2025** |
| Deposition of witness for | :: | **PW. 1** |
| Name | :: | **செல்வம்** |
| Father's Name | :: | **வெள்ளைச்சாமி** |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர். எதிரி வழக்கறிஞர் ஆஜர்.**
**20.04.2026**
**முதல் விசாரணை**:

1. நான் தற்போது வலுக்கலொட்டியில் குடியிருந்து ஓட்டுநராக பணி செய்து வருகிறேன். கடந்த 14.03.2024ம் தேதி காலை சுமார் 09.30 மணியளவில் நான் கற்பகம் ஏஜென்சிக்கு சிமெண்ட் மூடை ஏற்றுவதற்காக சென்றிருந்தேன். அப்போது கற்பகம் ஏஜென்சியில் மாசாண கருப்பசாமி கோவிலில் இருந்து மூன்று வருடத்திற்கு முன் வாங்கிய பொருட்களுக்கான தொகை நிலுவையில் இருப்பதாக என்னிடம் கூறினார்கள். கோவிலில் உள்ளவர்கள் போன் நம்பர் ஏதேனும் என்னிடம் கேட்டார்கள். அப்போது கோவிலின் கணக்கு பிள்ளை சங்கரின் போன் எண்களை நான் கொடுத்தேன். உடனே கடைக்காரர் சங்கருக்கு போன் செய்து ஏதோ பேசி உள்ளார். அதன்பிறகு சங்கர் ஆஜர் எதிரியான சக்கரவர்த்தியிடம் ஏதோ கூறி உள்ளார். அதனால் நான் பொருட்களை ஏற்றி முடிப்பதற்கு உள்ளேயே எதிரி கற்பகம் ஏஜென்சிக்கு வந்துவிட்டார். அங்கு வந்து என்னை பார்த்து அசிங்கமாக தேவடியா மகன்தான் போன் நம்பர் கொடுத்தது என்று அசிங்கமாக பேசினார். அப்படியே எனது கழுத்தில் சங்கை பிடித்து கீழே தள்ளிவிட்டார். நான் கீழே விழுந்ததில் எனக்கு பின்தலையில் அடிபட்டு இரத்தம் வந்தது. அருகில் இருந்தவர்கள் வந்து

விலக்கிவிட்டார்கள். எங்கள் பிரச்சனையில் தலையிட்டால் கொலை செய்து விடுவேன் என்று கூறினார். பின்னர் நான் அருண்குமார் என்ற தெரிந்த நபருடன் விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். நான் மூன்று நாட்கள் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். விருதுநகர் அரசு மருத்துவமனையில் இருந்தபோது அன்றைய தினமே மாலை நேரத்தில் என்னிடம் புகார் வாங்கினார்கள். நான் சொல்ல சொல்ல போலீசார் ஒருவர் புகாரை எழுதினார். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மற்றும் அதிலுள்ள கையெழுத்து என்னுடையது. **(புகார்மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாயப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை. எனவே, குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.**